- பாதுகாப்பு வலையுடன் கூடிய கிணறு மற்றும் நீர் இறைக்கும் இயந்திரம்

## 1.6. நிதி வளம்

### 1.6.1நிதி வழங்குனர் விபரம்

**பிரதான நிதி வழங்குனர்** :
- ORHAN Sri Lanka UK.
- BAT பிரித்தானிய நற்பணி மன்றம்

**உப நிதி வழங்குனர்** :
- Stuff Tung Tamils Aid ( STA) Switzerland
- தமிழ் கலாச்சார நற்பணி மன்றம் (நெதர்லாந்து)
- மியோட்
- கண்ணகி துர்க்கை அம்மன் ஆலயம், லண்டன்
- தனிப்பட்டோர்

| | |
|---|---|
| உண்மைச்செலவீனம் டிசம்பர் 31 வரை | : 9,690,263.00 |
| நிதி அனுசரயையாளர்கள் பங்களிப்பு | : 6,801,492.02 |
| ஓஹான் பங்களிப்பு | : 2,888,770.98 |
| உண்மை வருமானம் | : 9,690,263.00 |

## 02. செயற்பாடுகள்

### 2.1. பயிற்சிகளுடன் தொடர்பாடுடைய செயற்பாடுகள்

2.1.1. பயிற்சி நிலையத்தின் வாகனத்தில் மாணவர்களை பயிற்சி நிலையத்திற்கு அழைத்து வருதல்

2.1.2. காலை உணவளித்தல்

2.1.3. காலைக்கூட்டம்

2.1.4. நாளாந்த வாழ்வியற் பயிற்சிகள்

2.1.5. பால் வழங்குதல்

2.1.6.கல்விக்குழு, பயிற்சிக்குழு மற்றும் பாதுகாப்புக்குழு ஆகியவற்றுக்கு பயிற்சி அளித்தல்

2.1.7. மதிய போசனம் வழங்குதல்

2.1.8. மாணவர்களை வீடுகளுக்கு அழைத்துச்செல்லல்

**2.2. மருத்துவப்புனர்வாழ்வுடன் தொடர்புடைய செயற்பாடுகள்**

**2.2.1. வருடாந்த பரிசோதனைகள்**

- **வருடாந்த மருத்துவப் பரிசோதனை :-**

  வவுனியா பொது வைத்தியசாலை வைத்தியர்களான வைத்தியர்.k.தமிழினி, வைத்தியர்.T.சேருஜன், வைத்தியர். R.பிரதீபன் ஆகியோர்களால் 25.01.2017 அன்று 75 மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

- **வருடாந்த போஷாக்குப் பரிசோதனை :-**

  வருடாந்த போஷாக்குப் பரிசோதனை 75 மாணவர்களுக்கும் வள ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்டது.

- **வருடாந்த நுண்ணறிவுப் பரிசோதனை :-**

  வருடாந்த நுண்ணறிவுப் பரிசோதனை 75 மாணவர்களுக்கும் வள ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்டது.

- **வருடாந்த இயன்மருத்துவப் பரிசோதனை :-**

  வருடாந்த இயன்மருத்துவப்பரிசோதனை 12 மாணவர்களுக்கும் இயன் மருத்துவரினால் மேற்கொள்ளப்பட்டது.

**2.2.2. தொடர்மருத்துவப் பரிசோதனைகள் :-**

43 மாணவர்கள் தொடர் மருத்துவப் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டமை. (இதில் 22 மாணவர்கள் 01 சிகிச்சை நிலையங்களுக்கும், 17 மாணவர்கள் 02 சிகிச்சை நிலையங்களுக்கும், 03 மாணவர்கள் 03 சிகிச்சை நிலையங்களுக்கும், 01 மாணவர்கள் 04 சிகிச்சை நிலையங்களுக்கும் செல்வதாக அமையும்)

| தொடர் மருத்துவப் சிகிச்சை | மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| கண்சிகிச்சை நிலையம் | 06 |
| காது மூக்கு தொண்டை சிகிச்சை நிலையம் | 02 |
| வலிப்பு சிகிச்சை நிலையம் | 09 |
| பற் சிகிச்சை நிலையம் | 03 |
| குழந்தை சிகிச்சை நிலையம் | 08 |
| எண்பு சிகிச்சை நிலையம் | 01 |
| பேச்சுமொழிப்பயிற்சி | 17 |
| உளநல சிகிச்சை நிலையம் | 11 |
| இயன்மருத்துவம் சிகிச்சை நிலையம் | 12 |

**2.2.3. போஷாக்கு நிகழ்ச்சித்திட்டம்:-**

மாணவர்களின் போஷாக்கு நிலைமைக்கு அமைவாக பின்வரும் போஷாக்கு உணவுகள் வழங்கப்பட்டன.

- நாள் ஒன்றிக்கு ஒரு மாணவருக்கு 175ml பால் கிழமையில் 04 நாட்களும் இலைக்கஞ்சி கிழமையில் ஒரு நாளும் வழங்கப்பட்டது.
- பெற்றோர்களால் தயாரித்து அனுப்பப்படும் போஷாக்கான காலை உணவு
- நிலையத்தால் தயாரிக்கப்படும் போஷாக்கான மதிய உணவு

**2.2.4. வழங்கப்பட்ட சிகிச்சைகள் :-**

- **இயன்மருத்துவம் :-** பயிற்சி நிலையத்திலேயே இயன்மருத்துவம் 12 மாணவர்களுக்கும் இயன்மருத்துவரினால் வழங்கப்பட்டது.

- **பேச்சுமொழிப்பயிற்சி :-** பயிற்சி நிலையத்திலேயே பேச்சு மொழிப் பயிற்சி 17 மாணவர்களுக்கும் பேச்சு மொழிப் பயிற்சியாளரால் வழங்கப்பட்டது.

- **யோகா பயிற்சி :-** பயிற்சி நிலையத்திலேயே யோகா பயிற்சி அனைத்து மாணவர்களுக்கும் வள ஆசிரியர்களால் வழங்கப்பட்டது.

- **விளையாட்டு பயிற்சி :-** பயிற்சி நிலையத்திலேயே விளையாட்டு பயிற்சி அனைத்து மாணவர்களுக்கும் வளஆசிரியர்களால் வழங்கப்பட்டது.

## 2.3. சமூகப்புனர்வாழ்வுடன் தொடர்புடைய செயற்பாடுகள்

### 2.3.1. விளையாட்டு செயற்பாடுகள்

- 05.04.2017 அன்று புதுவாழ்வு பூங்கா மைதான திறப்பு விழா மற்றும் விளையாட்டு போட்டியில் 52 மாணவர்கள் பங்குபற்றினர்.

- 29.7.2017, 30.07.2017 ஆகிய தினங்களில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற பரா ஒலிம்பிக் விளையாட்டு போட்டியில் 26 மாணவர்கள் பங்கு பற்றி சான்றிதழ்களையும், பதக்கங்களையும் பெற்றுக்கொண்டனர்.

| **பதக்கங்கள்** | **எண்ணிக்கை** |
|---|---|
| தங்கம் | 05 |
| வெள்ளி | 04 |
| வெண்கலம் | 03 |
| **மொத்தம்** | **12** |

- 26.09.2017 அன்று சர்வதேச விசேட தேவைக்குட்பட்டோர் தினத்தை முன்னிட்டு வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் ஒழுங்குபடுத்திய விளையாட்டு போட்டியில் 15 மாணவர்கள் பங்குபற்றினர். இதில் வெற்றியீட்டிய 04 மாணவர்கள் கொழும்பு கோமாகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டு அரங்கில் நடைபெற்ற அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றி பரிசில்களையும் பெற்றனர்.

- 24.11.2017 அன்று சர்வதேச விசேட தேவைக்குட்பட்டோர் தினத்தை முன்னிட்டு வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் ஒழுங்குபடுத்திய விளையாட்டுப் போட்டியில் 06 மாணவர்கள் பங்குபற்றினர்.

### 2.3.2. கல்வி சுற்றுலா

37 மாணவர்கள் 05.02.2017 அன்று யாழ்ப்பாணம் வல்லிபுர கோயில், சந்நிதி கோயில், நல்லூர் முருகன் கோயில், யாழ் பௌத்த விகாரை, யாழ் அந்தோனி தேவாலயம், யாழ். பொது நூலகம், யாழ். சுப்பிரமணியம் சிறுவர் பூங்கா, சங்குபிட்டி பாலம் ஆகியவற்றிற்கு கல்வி சுற்றுலா அழைத்து செல்லப்பட்டார்கள்.

### 2.3.3. மாணவர் மன்றம் :-

மாணவர் மன்றம் மாதம் நான்கு தடவை நடாத்தப்பட்டது.

**2.3.4. சமயவழிபாட்டு செயற்பாடுகள் :-**

காலைக்கூட்டங்கள் 04 சமய வாழிபாடுகளையும் உட்படுத்தி இருந்தன. 16.01.2017 அன்று தைப்பொங்கல், 12.05.2017 அன்று வெசாக் பண்டிகையும், 28.07.2017 அன்று ரம்சான் பண்டிகையும், 28.07.2017 அன்று சரஸ்வதி பூஜையும் 29.11.2017 அன்று ஒளி விழாவும், கொண்டாடப்பட்டது.

**2.3.5. கலாசார நிகழ்வுகள் :-**

- 11.11.2017 அன்று வவுனியா தெற்கு கல்வி வலயத்தால் வ/சைவபிரகாசா மகளிர் கல்லூரியில் நடாத்தப்பட்ட விசேட தேவைக்குட்பட்டோர் எனும் நிகழ்வில் 08 மாணவர்கள் குழு நடனம் ஒன்றை வழங்கினர்.

- 08.12.2017 அன்று வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் நடாத்தும் விசேட தேவைக்குட்பட்டோர் எனும் நிகழ்வில் 08 மாணவர்கள் குழு நடனம் ஒன்றை வழங்கினர்

**2.3.6. பெற்றோர் கூட்டமும் சிரமதானமும்**

ஒவ்வொரு மாதமும் நான்காவது சனிக்கிழமை பெற்றோர் கூட்டமும் சிரமதானமும் நடாத்தப்பட்டன. சராசரியாக 37 பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

| இல | திகதி | பெற்றோர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | 26.01.2017 | 49 |
| 02 | 25.02.2017 | 40 |
| 03 | 25.03.2017 | 39 |
| 04 | 29.04.2017 | 42 |
| 05 | 27.05.2017 | 35 |
| 06 | 24.06.2017 | 31 |
| 07 | 15.07.2017 | 35 |
| 08 | 12.08.2017 | 57 |
| 09 | 30.09.2017 | 35 |
| 10 | 28.10.2017 | 35 |
| 11 | 25.11.2017 | 09 |
| 12 | 23.12.2017 | 31 |

**2.3.7. வீட்டுத்தரிசிப்புக்கள் :-**

தீர்மானிக்கப்பட்ட நேர அட்டவணைக்கு ஏற்ப பெற்றோர்களுடன் கலந்துரையாடுவதற்காக ஆசிரியர்கள் வீட்டுத்தரிசிப்புக்கள் மேற்கொண்டனர்.

**2.3.8. சைகைமொழி :-**

சைகைமொழி ஆசிரியரினால் மாணவருக்கு சைகைமொழி பயிற்சிகள் வழங்கப்பட்டன.

**2.4. பொருளாதார புனர்வாழ்வுடன் தொடர்புடைய செயற்பாடுகள்:-**

கல்விக்குழு மற்றும் பயிற்சிக்குழு மாணவர்களுக்கு பின்வரும் தொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

- மெழுகுதிரி உற்பத்தி
- கடித உறை தயாரித்தல்
- வாழ்த்து அட்டை தயாரித்தல்
- காகித பூ தயாரித்தல்

**2.5. ஏனைய செயற்பாடுகள் :-**

- ஓஹான் *10.11.2017* அன்று சர்வதேச ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டது. இதில் பயிற்சி நிலைய அனைத்து மாணவர்கள், வள ஆசிரியர்கள், *03* பெற்றோர்கள் மற்றும் ஓஹான் நிறுவன செயலாளர், ஊழியர்கள் கலந்து கொண்டார்கள்.

- டவுண்சின்றோம் தினம் *21.03.2017* அன்று கொண்டாடப்பட்டது. இதில் புதுவாழ்வு பூங்கா மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், நிறுவன ஊழியர்களும் கலந்து கொண்டார்கள்.

- *01.10.2017* அன்று திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் நடைபெற்ற சிறுவர் தினத்தில் *10* மாணவர்களும், *03* ஆசிரியர்களும், நிறுவனத் தலைவரும் பங்குபற்றினார்கள்.

- *02.10.2017* அன்று புதுவாழ்வு பூங்கா பாடசாலையில் நடைபெற்ற சிறுவர் தினத்தில் *50* மாணவர்களும் மற்றும் ஆசிரியர்கள், நிறுவன ஊழியர்களும் பங்குபற்றினார்கள்.

## 03. எமது சில அடைவுகள்

### 3.1. நுண்ணறிவில் முன்னேற்றம்


| நுண்ணறிவில் முன்னேற்றம் (2017 ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரை) | | |
|---|---|---|
| மி. தி | மிகத்திருப்தி | 5 அல்லது 5 க்கு மேற்பட்ட புள்ளி |
| தி | திருப்தி | 1 - 4 புள்ளி வரை |
| ச | சராசரி | 0 |
| தி. இ | திருப்தி இன்மை | -1 - -4 புள்ளி வரை |
| மி.தி.இ | மிகத்திருப்தி இன்மை | -5அல்லது -5 க்கு மேற்பட்ட புள்ளி |

| கால எல்லை | மி.தி. | தி. | ச | தி.இ | மி.தி.இ | வருகை தராதோர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஜனவரி - ஏப்ரல் வரை | 10 | 16 | 26 | 14 | 05 | 04 | 75 |
| 2017 மே - ஆகஸ்ட் வரை | 03 | 15 | 34 | 06 | 11 | 06 | 75 |
| 2017 செப்டெம்பர் - டிசெம்பர் வரை | 08 | 14 | 14 | 17 | 18 | 04 | 75 |

### 3.2. போஷாக்கு மட்டத்தில் முன்னேற்றம் :-

| போஷாக்கு மட்டத்தில் முன்னேற்றம் (2017 ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரை) | | |
|---|---|---|
| கு.நி | குறை நிறை | 18.5 க்கு கீழ் |
| சா | சாதாரணம் | 18.6 - 25 |
| மி.நி | மிகை நிறை | 25 - 30 |
| அ.மி.நி | அதி மிகை நிறை | 30க்கு மேல் |

| கால எல்லை | போஷாக்கு மட்டத்தில் முன்னேற்றம் (2017 ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரை) | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | கு.நி | ச | மி.நி | அ.மி.மி | வருகை தராதோர் | மொத்தம் |
| 2017 ஜனவரி | 43 | 23 | 04 | 00 | 05 | 75 |
| 2017 டிசம்பர் | 31 | 19 | 04 | 00 | 21 | 75 |




## 3.3. சிகிச்சைகள் ஊடாக பௌதீக நிலைமைகளில் ஏற்பட்ட முன்னேற்றம்

| சிகிச்சைகள் ஊடாக பௌதீக நிலைமைகளில் ஏற்பட்ட முன்னேற்றம் (2017 ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரை) | | |
|---|---|---|
| மி. தி | மிகத்திருப்தி | அதிக முன்னேற்றம் |
| தி | திருப்தி | மிதமான முன்னேற்றம் |
| தி. இ | திருப்தி இன்மை | முன்னேற்றம் இன்மை. |


| இல | சிகிச்சை | முன்னேற்றம் அடைந்த மாணவர்களின் எண்ணிக்கை (2017 ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரை) | | |
|---|---|---|---|---|
| | | மி. தி | தி | தி. இ |
| 01 | இயன்மருத்துவம் | 04 | 01 | 07 |
| 02 | பேச்சுமொழி | 07 | 02 | 08 |
| 03 | யோகா பயிற்சி | 28 | 17 | 30 |

**3.4. நாளாந்த வாழ்வியல் திறன் சார்ந்த முன்னேற்றம் :-**

நிலையம் பல்வேறு நாளாந்த வாழ்வியல் பயிற்சிகளை வழங்கியது. அவற்றுள் 10 பயிற்சிகள் மட்டும் முன்னேற்றத்தை அளவிட எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| மி. தி | மிகத்திருப்தி |
| தி | திருப்தி |
| ச | சராசரி |
| தி. இ | திருப்தி இன்மை |
| மி.தி.இ | மிகத்திருப்தி இன்மை |

| இல | திறன்கள் | முன்னேற்றம் அடைந்த மாணவர்களின் எண்ணிக்கை (2017 ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரை) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | மி. தி | தி | ச | தி. இ | மி.தி.இ |
| 01. | தண்ணீர் உள்ள வாளியை ஒரு கையால் தூக்கி வருதல். | 31 | 22 | 10 | 03 | 09 |
| 02. | படுக்கை விரித்து மடித்தல். | 33 | 09 | 14 | 06 | 13 |
| 03. | ஆடைக்கு ஊசியைப் பயன்படுத்தல் | 07 | 05 | 24 | 17 | 22 |
| 04. | காதுகளை சுத்தப்படுத்தல் | 04 | 12 | 20 | 18 | 21 |
| 05. | எளிய கட்டளைகளை ஏற்று செய்தல் | 20 | 15 | 20 | 04 | 16 |
| 06. | மன்னிக்கவும், நன்றி என கூறுதல். | 09 | 13 | 19 | 14 | 20 |
| 07. | ஒலி நாடாவைத் திறத்தல். | 13 | 15 | 19 | 10 | 18 |
| 08. | உடைகளை கழுவுதல். | 02 | 10 | 14 | 19 | 30 |
| 09. | வகுப்பறையைக் கூட்டுதல். | 16 | 07 | 19 | 11 | 22 |
| 10. | மாடிப்படியில் ஏறுதல், இறங்குதல். | 22 | 04 | 24 | 07 | 18 |




**3.5. விளையாட்டு மற்றும் கலாசார செயற்பாடுகளில் முன்னேற்றம் -**

- மாவட்ட மட்ட நீர் நிரப்பு போட்டிகளில் 02 மாணவர்கள் 02ம் மற்றும் 3ம் இடத்தை வெற்றிக்கொண்டனர் .

| இல | விளையாட்டுப்போட்டி | தங்க பதக்கம் | வெள்ளிப் பதக்கம் | வெண்கல பதக்கம் |
|---|---|---|---|---|
| *01* | வடக்கு மாவட்ட மட்ட பரா ஒலிம்பிக் | *05* | *04* | *03* |



## selected case studies

### Heartfelt thanks from parents

### 1. எனது மகனும் புன்னகைக்கும் புதுவாழ்வுப் பூங்காவும்

எமது சொந்த இடம் வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள பனிக்கர் புளியங்குளம் எனும் கிராமமாகும். நாட்டின் யுத்த சூழ்நிலை காரணமாக இடம் பெயர்ந்து மன்னார் மாவட்டத்தில் உள்ள கொக்குப்படையான் எனும் கிராமத்தில் வாழ்ந்து வந்த வேளை அங்கேயே திருமணம் புரிந்து அதன் மூலம் எமக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தார். அவருக்கு சர்மிளன் எனப் பெயர் சூட்டினோம். கொக்குப்படையான் எனும் கிராமம் கடல் வளத்தால் நிறைவு பெற்ற ஓர் கிராமமாகும். எனது மகன் பாடசாலை செல்லும் வயதை அடைந்தும் எமது ஊரில் உள்ள பாடசாலையில் சேர்ப்பதற்கு அழைத்துச்சென்றோம். மூன்று நாட்களாக சென்று மூன்றாம் நாள் அதிபரைச் சந்தித்து பாடசாலையில் சேர்க்கப்பட வேண்டும் எனக் கூறினேன். ஆனால் அதிபர் உங்களின் மகனை இப்பாடசாலையில் சேர்க்க முடியாது. உங்கள் மகனை சேர்ப்பதற்கென ஒரு பாடசாலை உள்ளது. அங்கே உங்கள் மகனை சேர்த்து படிப்பியுங்கள் எனக் கூறினார். அதனைக் கேட்டு நான் எனது மகனுடன் கண்ணீரோடு வீடு திரும்பினேன். மனதேனையுடன் எனது மகனை என்னுடனேயே வைத்துக்கொள்ள வேண்டும் என எண்ணினேன். இருப்பினும் காணும் அனைவரும் மகனை பாடசாலைக்கு அனுப்புமாறு கூறினார்.

இவ்வாறு நாட்கள் பல ஓடின. நான் எனது சொந்த இடமான வவுனியாவிற்கு எனது அம்மாவைப் பார்க்க வந்த போது வவுனியா வைத்தியசாலைக்கு கிளினிக் அழைத்துச் சென்றேன். அங்கே உள்ள வைத்தியர் நீங்கள் பாடசாலைக்குச் செல்கின்றீர்களா எனக் கேட்ட போது மகன் போகவில்லை என பதிலளித்தார். பாடசாலை செல்ல விருப்பமா எனக் கேட்ட போது மகன் விருப்பம் எனக் கூறினார். அவ் வைத்தியர் உடனேயே வவுனியாவில் உள்ள ஓஹான் புதுவாழ்வுப் பூங்காவிற்கு தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு இவ்வாறு ஒரு சிறுவன் இருக்கின்றார். அவரை உங்கள் பாடசாலையில் சேர்க்கலாமா எனக் கேட்ட போது அதற்குப் பொறுப்பானவர் கூட்டிக் கொண்டு வாருங்கள் எனக்கூறினார்.

நாட்டின் அசாதாரன சூழ்நிலை காரணமாக நான் எனது கணவரையும் எனது மகன் தனது தந்தையையும் பிரிந்து துயருற்றுருக்கும் பொழுது இவ்வாறான ஒரு நற் செய்தி எனது மனதினைக் குளிரூட்டியது. ஓஹான் புதுவாழ்வுப் பூங்காவிற்கு அழைத்துக் கொண்டுவரச் சொன்ன திகதியில் அழைத்துக் கொண்டு சென்றேன். அங்கு சென்ற போது தான் எனது மனக்குறைகள் ஓரளவு என்னை விட்டு விலகியது. எனது மகனை விட இயலாத எத்தனையோ சிறுவர்கள் அப்பூங்காவில் உள்ளதைக் கண்டேன். அங்குள்ள ஆசிரியர்களும் நிர்வாகத் தலைவர் திரு.வெ.சுப்பிரமணியம் ஆசிரியர் அவர்களும் பிள்ளைகளை அன்பாக அரவனைப்பதைப் பார்த்த போது புதுவாழ்வுப் பூங்கா என்னை மகிழ்ச்சிக் கடலில் தள்ளியது. எனது மகனை அன்றே புதுவாழ்வுப் பூங்கா பாடசாலையில் இணைத்து விட்டேன்.

எனது மகன் வீட்டில் இருக்கும் போது மிகவும் பிடிவாதம் பிடிப்பார். ஆனால் தற்போது பிள்ளைகளுடன் சேர்ந்து பழகி வந்ததால் தற்போது அயல் வீடுகளில் உள்ள பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடி எந்நேரமும் சந்தோசமாக இருக்கின்றார். கிளிநொச்சி மாவட்டத்தில் இடம் பெற்ற மாபெரும் விளையாட்டுப் போட்டியில் எல்லாப் பிள்ளைகளுடனும் சேர்ந்து மகிழ்ச்சியுடன் விளையாடினார். ஓட்டப்போட்டியில் சேர்ந்து ஓடி நான்காவதாக வந்தார் நான்காவதாக வந்தாலும் எனது மனதை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

நாம் பெற்ற பிள்ளைகளின் இடையூறுகளால் பெற்றோரே இடைஞ்சல் பட்டு சினக்கும் போது புதுவாழ்வுப் பூங்காப் பள்ளியில் அனைத்து ஆசிரியர்களும் ஒரு அன்னையை விடவும் மேலாக மிகவும் அன்பாகவும் பாசமாகவும் அரவனைப்பதைப் பார்க்கும் போது மெய்சிலிர்க்க வைப்பது தான் வியர்ப்பு.

அடுத்ததாக எமது பிள்ளைகளை ஏற்றி வரும் வாகனத்தின் சாரதியையும் நினைத்து பெருமிதம் அடைகின்றேன். காரணம் ஒரு வாரத்தில் 5 நாட்கள் காலை. மாலை இரு வேளைகள் அவர்களை ஏற்றி இறக்கி அந்த நேரங்களில் பிள்ளைகளால் ஏற்படும் தொல்லைகளையும் இன்னல்களையும் சகித்து சிறிதேனும் மனதில் சலிப்பு ஏற்படாவண்ணம் பிள்ளைகளை அன்பாக வழிநடத்துகின்றனர் இதற்கு அவர்களுக்கு நானும் எனது குடும்பத்தினர் சார்பிலும் நன்றி கூற கடைமைப்பட்டுள்ளேன்.

அது மட்டுமன்றி புதுவாழ்வுப் பூங்கா எமது பிள்ளைகளுக்கு ஐந்து நாட்களும் 05 விதமான சத்துணவும். பருகுவதற்கு பாலும் வழங்கி பிள்ளைகளின் ஆரோக்கியமான வாழ்விற்கு வழியமைத்துக் கொடுக்கின்றது. தற்போது எமது பிள்ளைகள் எம்மிடம் இருப்பதை விட புதுவாழ்வுப் பூங்காவில் அதிகமாக பெழுதை கழிக்கின்றனர்.அங்கே உள்ள பெறுப்பாளர்கள். ஆசிரியர்கள். உதவியாளர்கள் அனைவருகம் மிகவும் பெறுமையாகவும். அன்பாகவும் பிள்ளைகளை வழி நடத்துவது மட்டுமன்றி உடற்பயிற்சி. யோகாசனம். கல்வி கற்ப்பித்தல் போன்ற நற்பண்புகளை வளர்க்கின்றனர்.

இன்று எனது மற்றய சிறுவர்களைப்போல் மனமகிழ்வுடன் சந்தோசமாக இருப்பதைப் பார்க்கும் போது புதுவாழ்வுப் பூங்காவின் பொறுப்பாளர்கள் அவர்களையும் ஆசிரியர்கள் வழிநடத்துனர்கள் கண்காணிப்பாளர்கள் பேரூந்து சாரதிகள் அனைவருக்கும் என் சார்பிலும் என் குடும்பத்தார் சார்பிலும் நன்றி கூறி பல்லாண்டு காலம் நீடுழி வாழ வேண்டும் என இறைவனைப் பிராத்திக்கிறேன்.

நன்றி

**ச. இராஜலக்ஸ்மி**
**(சர்மிளனின் தாயார்)**
**பனிக்கர்புளியங்குளம்,**
**கல்மடு.**

## 2. செல்வி செல்வராசா திபேதனா

வவுனியா மாவட்டம் தவசிக்குளம் கிராமத்தில் அமைந்துள்ள புதுவாழ்வுப் பூங்கா (வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்) பாடசாலையின் நிறுவாகத்தினர் மற்றும் ஆசிரியர்கள் இவர்களின் குழு மலர் வெளியீடு செய்வதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். இப்பாடசாலையில் கல்வி கற்று வரும் குழந்தைகளில் எனது மகள் செல்வி.செல்வராசா திபேதனாவும் ஒருவர். இவர் 2004.04.17ம் திகதி வவுனியா வைத்தியசாலையில் நன்றாகப் பிறந்தார். பின்பு இவருக்கு மூளையில் ஏற்பட்ட காய்ச்சல் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டார். மூன்று வயதைத் தாண்டியும் நடக்க முடியாமல் தவன்றே சென்று வருவதைக் கண்ட அன்றைய இந் நிறுவனத்தின் வெளிக்கள ஆசிரியரான க.சுதர்சினி என்பவர் இக்குழந்தையை இந்நிறுவத்தில் பதிவு செய்து இக்குழந்தையை நடப்பதற்கான பயிற்சிகளை எமது வீட்டில் வைத்து மேற்கொண்டு இரண்டு வருடங்களுக்குள் நடக்க கூடிய நிலைமைக்குக் கொண்டு வந்தார்.

பின்பு இப்பாடசாலையில் (புதுவாழ்வுப் பூங்கா) இக்குழந்தை சேர்க்கப்பட்டு பயிற்சிகளும் பாடங்களும் கற்றுக்கொடுக்கப்பட்டு வருகின்றார். தற்போது இவர் விளையாட்டுக்களில் எமது மாவட்டத்திலும் வெளிமாவட்டத்திலும் வெற்றிகள் பெற்று பரிசில்களும் பெற்றுள்ளார். அதுமட்டும்மல்லாமல் கலை நிகழ்ச்சிகளிலும் வவுனியா யாழ்ப்பாணம் கிளிநொச்சி மற்றும் கொழும்பு வரை சென்று பல மேடைகளில் திறன்பட நடித்து நடனமாடி பல பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

இவை அனைத்திற்கும் இந் நிறுவனத்தின் நிறுவாகத்தினர்களும் மற்றும் ஆசிரியர்களும் மேற்கொண்ட இன மத மொழி சார்பற்ற மனிதாபிமான முறையில் முழு மனதுடன் திருப்திகரமாக சேவையாற்றி வருகின்றமையை இட்டு எனது குடும்பமும் உறவினர்களும் எமது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி.

**திரு திருமதி. செல்வராசா கோணேஸ்வரி**
**(செ.திபேதனாவின் தாய், தந்தை)**
**குடரிக்குளம் வீதி,**
**வெங்கலச் செட்டிக்குளம்.**

# மனநலிவு நோய்
# (Down's syndrome)

டவுன்ஸ்சிண்ட்ரோம் குழந்தைகள் பிறக்கும் போதே மனளர்ச்சிக் குறையுடையவர்கள். இவர்கள் தோற்றத்தில் மங்கோலியர்கள் போல் இருப்பதால் இவர்கள் மங்கோலியக் குழந்தைகள் என ஆரம்பத்தில் அழைக்கப்பட்டனர்.

1959ம் ஆண்டு மரபியல் ஆய்வின் திருப்பு முனையாக அமைந்தது நிறமூர்த்தங்கள் (குரோமோசோம்கள்) கண்டறியப்பட்டதாகும். டவுன்ஸ்சிண்ட்ரோம்க்கு நிறமூர்த்தங்களின் பொருத்தமற்ற இயைபாக்கமே காரணம் என ஆய்வுகள் நிருபித்தன. ஆண்களின் 23 நிறமூர்த்தங்களும், பெண்ணின் 23 நிறமூர்த்தங்களும் இணைந்து தான் ஒரு கருவை உண்டாக்குகின்றன. இந்த நிறமூர்த்த ஜோடிகளில் 21வது நிறமூர்த்த ஜோடியில் ஏற்படும் பொருந்துகை குறைபாடே "டவுன்ஸ் சிண்ட்ரோமை" எற்படுத்துகிறது. இந்த குறைபாடுள்ள குழந்தைகளை சாதாரண குழந்தைகளாக்க முடியாது. ஆனால் கர்ப்பத்திலேயே கருவுக்கு டவுண்ஸ் சிண்ரோம் உள்ளதா?, இல்லையா? என்பதை அறிந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க முடியும். இதற்கான தொழில்நுடபம் கண்டுபிடிக்கப்பட்டு நீண்ட நாட்களாகிவிட்டாலும் அது குறித்த விழிப்புணர்வு மக்களிடையே மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

#### டவுன்ஸ்சிண்ட்ரோமின் பின்னணி?

டவுன்ஸ் சிண்ட்ரோம் ஒரு பரம்பரை நிலைமை. ஒரு பிள்ளை வழக்கமான 46 நிறமூர்த்தங்களுக்கு பதிலாக 47 நிறமூர்த்தங்களுடன் பிறக்கும் போதே இவ்வாறான குழந்தைகள் பிறக்கின்றன. 21 வது சோடி நிறமூர்த்தத்தில் உள்ள மேலதிகமான நிறமூர்த்தம் மூளை வளர்ச்சியில் தாமதத்தையும் உடலில் அநேக இயற்கைக்கு மாறான நிலைகளையும் ஏற்படுத்தும்.

#### டவுன்ஸ்சிண்ட்ரோம் உடையோரின் அறிகுறிகள்

ஒவ்வொரு பிள்ளையிதும் டவுன்ஸ்சிண்ட்ரோம் அறிகுறிகள் வேறுபட்டதாக காணப்படலாம். டவுன்ஸ்சிண்ட்ரோம் பிள்ளைகள் பொதுவான உடல் சிறப்பம்சங்களைக் கொண்டிருப்பார்களே ஒழிய, குடும்ப அங்கத்தவர்களைப் போன்று தோற்றமளிக்க மாட்டார்கள். இந்த சிறப்பம்சங்கள் பின்வருவனவற்றை உட்படுத்தும்.

1. கண்மடலின் உள் முனையில் தெளிவான தோல் மடிப்புகளுடன் மேல்நோக்கிச் சாய்ந்த கண்கள்.
2. சிறிய, கீழ்ப்பதிந்த காதுகள்

3. சிறிய வாய்
4. சிறிய கன்னங்கள் நிறைந்த வட்டமான முகம்
5. வெளியே நீட்டிக்கொண்டிருக்கும் பெரிய நாக்கு
6. உள்ளங்கையில் ஒரு மடிப்பு
7. தட்டையான மூக்கு
8. தலையின் தட்டையான பின்பகுதி
9. தடித்த உதடுகள்
10. மிகவும் குட்டையான கழுத்து

**டவுன்ஸ்சிண்ட்ரோம் உடைய பிள்ளைகளிடம் காணப்படும் மருத்துவ பிரச்சினைகள்.**

டவுன்ஸ்சிண்ட்ரோம் இயலாமையுடன் பிறக்கும் எல்லா பிள்ளைகள் குழந்தைகளாக இருக்கும் போதும், பிள்ளைகளாக இருக்கும் போதும், வளர்ந்தவர்களாக இருக்கும் போதும் உடல்நலச் சிக்கல்களை எதிர்ப்படுகிறார்கள்.

டவுன்ஸ்சிண்ட்ரோம் இயலாமையுடன் பிறந்த பிள்ளைகள் பின்வரும் மருத்துவ நிலைமைகளுள் ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்டவற்றைக் கொண்டிருப்பார்கள்.

1. இதயக்கோளாறு
2. குடலில் அசாதாரண நிலைமை
3. கண்பார்வை பிரச்சினைகள்
4. காது கேட்டலில் பிரசினைகள்
5. நித்திரையில் மூச்சுத் திணறுதல்
6. குறைந்தளவு தைரோயிட் சுரத்தல்
7. கழுத்து மூட்டுக்களின் ஸ்திரமின்மை
8. தொற்று நோய்கள் இலகுவாக தொற்றிக் கொள்ளக்கூடிய ஆபத்து
9. சிலவகை புற்றுநோய்கள் ஏற்படும் ஆபத்து
10. இடுப்பு இயல்பு பிறழ்ந்த வளர்ச்சி

**டவுன்ஸ்சிண்ட்ரோம் இயலாமையுள்ள பிள்ளைகளுக்கு எப்படி உதவி செய்யலாம்.**

**1. ஆதரவு பெறல்**

டவுன்ஸ்சிண்ட்ரோமினால் ஏற்படும் மனரீதியான மற்றும் உடல் ரீதியான பாதிப்புக்கள் குழந்தையின் பெற்றோருக்கும், வளர்ந்து வரும் குழந்தைக்கும் பல சவால்களை உருவாக்கும். ஒரு பூரணமான குழந்தையைப் பெறுவதையே பெற்றோர்கள் பொதுவாகக் கற்பனை செய்வார்கள். தங்கள் குழந்தைக்கு பிறப்பிலேயே கோளாறு இருக்கின்றது என்பதை உணரும் போது பெற்றோர்கள் ஏமாற்றம் அடையலாம். அதிர்ச்சி, மறுத்தல், கவலை, கோபம் போன்ற பல

உணர்ச்சிகள் அவர்களுக்கு ஏற்படலாம். டவுன்சின்ரோமுள்ள பிள்ளைக்கும் பெற்றோக்கும் உதவ பல ஆதரவு குழுக்கள் இருக்கின்றன. அவற்றின் உதவியை குடும்ப அங்கத்தவர்கள் நாடுதல் வேண்டும். பிள்ளையை பொருத்தவரையில், ஆரோக்கியமான மகிழ்ச்சியான பெற்றோர் தான் பிள்ளைக்கு அதிகம் உதவியளிப்பவர்களாக இருப்பார்கள்.

பெரும்பான்மையான பெற்றோர்கள் தங்கள் பிள்ளையின் வளர்ச்சி மற்றும் விருத்தியைப்பற்றி கேள்விகளை அல்லது கவலைகளைக் கொண்டிருப்பார்கள். பிள்ளையின் மருத்துவர் அல்லது சிகிச்சையாளர் பிள்ளையின் முழு ஆற்றலையும் எவ்வாறு அடையலாம் என்பது பற்றிய தகவலை வழங்கக் கூடியவர்களாக இருப்பார்கள். ஆதரவுக் குழுக்களும் கூட ஆசிரியர்களோடு இணைந்து செயல்பட்டு பிள்ளையின் வளர்ச்சியும், விருத்தியும் சம்பந்தமான வேறு அம்சங்களிலும் வழிகாட்ட முடியும்.

**2. கல்வியும் பயிற்சியும்**

பெரும்பாலும் எல்லா டவுன்ஸ்சிண்ட்ரோமுள்ள குழந்தைகளும் பாடசாலைக்கச் செல்வார்கள் மற்றும் வழக்கமான வகுப்பறைகளில் கூட கலந்து கொள்ளக்கூடும். டவுன்ஸ்சிண்ட்ரோமுள்ள பிள்ளைகள் கற்றுக்கொள்வதில்இ வாசிப்பதில் மற்றும் எழுதுவதில் சற்று வேகம் குறைந்தவர்களாக இருப்பதன் காரணமாக விசேட உதவிகள் தேவைப்படலாம். உதாரணமாக பேச்சு சிகிச்சை மொழி திறமைகளைப் பலப்படுத்தலாம். உடல்சார்ந்த அல்லது தொழில்வழி சிகிச்சை அசைவுத் திறமையை முன்னேற்றக்கூடும்.

**3. மருத்துவ தலையீடு**

டவுன்ஸ்சிண்ட்ரோமுள்ள பிள்ளைகளுக்கு குறிப்பான எந்த மருத்துவ சிகிச்சையும் இல்லை அவர்கள் மருத்துவரை பார்த்து ஒழுங்காக தைரொயிட் பரிசோதனைகளை செய்து வரவேண்டும். வேறு உடல்நல பராமரிப்பளிப்பவர் விசேட கல்வி அல்லது பிள்ளைக்கு பயனளிக்கக் கூடிய வேறு உதவிகளைப் மருத்துவர் பரிந்துரைக்கக் கூடியவராக இருக்கக்கூடும்.

**4. எதிர்கால வாய்ப்பு**

பல டவுன்ஸ்சிண்ட்ரோமுள்ள பிள்ளைகள் முழுமையானதும் மகிழ்ச்சியானதுமான வாழ்க்கை வாழக்கூடிய வகையில் வளர்ந்து வருவார்கள். அவர்கள் பெரும்பாலும் கலகலப்பாகவும் நன்கு பழகுபவர்களாகவும் இருப்பார்கள். சிலர் மேல்நிலைப் பள்ளிப்படிப்பை பூர்த்தி செய்வார்கள். சிலர் பகுதிநேர அல்லது முழுநேர வேலைகளை செய்யக்கூடியவர்கள். சிலர் திருமணமும் செய்திருக்கிறார்கள் டவுன்ஸ்சிண்ட்ரோமுள்ள பலர் 50 மற்றும் 60 வயது வரை கூட

வாழ்கிறார்கள். ஆயினும் 20% ஆன டவுன்ஸ்சிண்ட்ரோமுள்ள பிள்ளைகள் 5 வயதிற்குள் இறந்துவிடுவார்கள்.

எது எவ்வாறாயினும் எம்மத்தியில் பிறக்கும் டவுன்ஸ் சின்ட்ரோமுள்ள பிள்ளைகளை ஒரு சுமையாகக் கருதாது அவர்களும் மனித சமூகத்தின் ஓர் அங்கம் என ஏற்றுக்கொண்டு புனர்வாழ்வு அளித்தலே சாலச் சிறந்தது.

**செல்வி.கோவிந்தராசா ஜெசிந்தா,**
**வள ஆசிரியர்,**
**புதுவாழ்வு பூங்கா.**





Bring the child to the centre



Bring the children to the centre



Breakfast



Morning Assembly



Morning Assembly



Daily Living Skills Training



Daily Living Skills Training



Daily Living Skills Training



Daily Living Skills Training



Daily Living Skills Training



Providing Milk



Sign Language



Speech Therapy



Play Therapy



Play Therapy



Physiotherapy



Yoga Therapy



Vocational Training



Training to Learning Group



Training to Training Group



Training to Security Group "C"



Training to Security Group "D"



Training to Security Group "E"



Home Garden



Students Forum



Cultural Activity



Students Shopping



Religious Activity



Religious Activity



Religious Activity



Religious Activity



Providing Lunch



Departure to the Home



Visitors



Home visit



Parent meeting



Parents siramathanam



Annual Medical Screening



Annual Medical Screening



Annual Nutritional Assessment



Excursion



Excursion




Non Academic Staff



Head Resource Teacher and Resource Teachers

# Location Of Training Centre



# Vote of Thanks

At this juncture of ending 12th year and entering into 13th year PUTHUVAZHVU POONGA as achieved numerous successes in spite of severe challenges faced by ORHAN. Therefore it is our unforgettable responsibility to pay our whole hearted thanks to the all stakeholders who rented their invaluable commitments and devotions towards our kids.

- Board of Director of ORHAN
- Funding Sponsors ,Other donors and well-wishers
- Kind donors
- Special lunch providers
- ORHAN' Staff
- PUTHUVAZHVU POONGA Head resource teacher, resource teachers and non academic staff
- PUTHUVAZHVU POONGA parents, guardians and students
- Institution and resource person who provided teacher Training
- Doctors of general hospital
- NGO'S , I NGO'S
- Government Departments



உமராஸ் උමරාස්

# UMARAAS

## Textiles

**Quality & Fashionabel Tex**

**No: 58, Tharmalingam Street, Vavuniya.**

**TP: 024 - 2222655**


# akaram printers

அகரம் பிரிண்டர்ஸ் අකරම් ප්‍රින්ටර්ස්

Digital Printing, Offset Printing,
Name Board, T-Shirt,Souvenir, Bag



No: 54, Kandasami kovil Road,Vavuniya.
Tel : 024 222 3772 | Mob: 077 534 1001
akaramprinters@gmail.com


"Disability
is not
Inability"